# கந்தசாமிக் கண்டர் கல்லூரி வேலூர் - நாமக்கல்

## முதுகலைத் தமிழாய்வுத்துறை சுயநிதி பாடப்பிரிவு

தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறை செந்தமிழ் சொற்பிறப்பியல் அகர முதலி திட்டம் மற்றும் கந்தசாமிக் கண்டர் கல்லூரி தமிழாய்வுத்துறை இணைந்து 30.01.2024 அன்று நடத்திய சொற்குவை மாணவத்தூதர் பயிற்சி திட்டம் ஜனவரி - 2024 கல்லூரிக் கருத்தரங்கக்கூடத்தில் நடைபெற்றது. துறைத்தலைவர் முனைவர் வே. தா. தர்மராஜா வரவேற்புரை வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் பொ. சாந்தி தலைமை உரை வழங்கினார். முதன்மை உரையை சென்னைக் கிறிஸ்துவக் கல்லூரி உதவிப்பேராசிரியர் முனைவர் சு. சதாசிவம் வழங்கினார். முனைவர் சசரவணன் இமயம் கல்லூரி வாணியம்பாடி, முனைவர் க. பூபதி அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி நாமக்கல், திரு செ. நாகராஜன் கே எஸ் ஜி கலை அறிவியல் கல்லூரி கோவை, திரு ஆர். கோபாலன் அந்தமான் தமிழ் இலக்கிய மன்றம் அந்தமான் ஆகியோர் சிறப்புரை வழங்கினர். திரு இரா. ராமகிருஷ்ணன் பொறுப்பாசிரியர் சுயநிதி பாடப்பிரிவு வாழ்த்துரை வழங்கினார்.





பயிலரங்கத்தின் திட்ட செயலாக்க உரையைச் சொற்பிறப்பியல் அகர முதலி திட்ட இயக்குனர் முனைவர் கோ. விஜயராகவன் ஐயா அவர்கள் வழங்கினார். செயலாக்க உரையில் தமிழில் உள்ள மொத்த சொற்கள் 5 லட்சம் என்றும், ஒரு பொருள் குறித்து பல சொற்கள் பற்றியும், பல பொருள்

குறித்து ஒரு சொல் பற்றியும் மாணவர்களுக்கு விளக்கினார். அதோடு மட்டுமல்லாமல் வழக்கத்தில் இல்லாத புதிய கலைச்சொற்களை மாணவர்களுக்கு கூறி அவற்றின் பொருளையும் விளக்கினார்.










திட்ட விளக்க உரையை திரு வே. பிரபு அவர்கள் வழங்கினார். திறன் செயலி மூலம் அகர முதலி திட்டத்தின் செயல்பாடுகளை அறியும் வண்ணம் செய்தார். மாணவர்களின் ஐயப்பாட்டுக்குரிய வினாக்களுக்கு விடைகளை அகர முதலி திட்ட இயக்குனர் அவர்கள் உரிய விளக்கத்துடன் மாணவர்களுக்கு விளக்கினார். இறுதியாக பயிலரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் இரா. செல்வராஜூ நன்றி உரை வழங்கினார்.